ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சமூகவியல் நோக்கில் வன்பக்தி

முனைவர் ம. எழில் பரமகுரு
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தியாகராசர் கல்லூரி, மதுரை – 09

ஆய்வுச் சுருக்கம்

வழிபாட்டினை பக்தி என்ற சொல்லால் குறிக்கலாம். அவ்வாறான பக்தி வன்பக்தி மென்பக்தி என்று இருப் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. வன்பக்தியினை சமூகவியல் நோக்கில் ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். பக்திநெறி, பக்தியின் படிநிலைகள், சைவ, வைணவ, கிறிஸ்துவ, இசுலாமிய அடியவர்களின் வன்பக்தியினை தக்க மேற்கோள்களுடன் விளக்கி ஆராய்ந்தும் வன்பக்தி முற்காலம் தொட்டு இன்றளவில் எவ்வாறு சமூகத்தில் நிலவுகிறது என்பதனை ஆராய்வதே இவ்வாய்வாகும்.

## முன்னுரை

உலகம் முழுவதும் வாழ்கிற மனித குலத்தில் வழிபாடு என்பது வாழ்வின் ஓர் அங்கமாக விளங்குகிறது. வழிபாட்டுணர்வைப் பக்தி என்ற சொல்லால் தமிழில் குறிக்கின்றனர். இறைவனிடம் மனிதன் கொண்டுள்ள அன்பையும் பற்றையும் பக்தியின் அடிப்படையாகக் கொள்ளலாம். இறைவனிடம் மட்டுமல்லாமல் இறையடியார்கள், முனிவர்கள், இறையருள் பெற்றோர் ஆகியோரிடமும் ஈடுபாடும் பற்றும் கொள்வதையும் பக்தி என்ற சொல்லாலே குறிக்கக் காணலாம். பக்தி தோன்றும்; களம் மனிதர்களுக்குள்ளும் சமூகங்களுக்குள்ளும் வேறுபடலாம். எனினும் இப் பக்தியானது இரண்டு பொதுப் பிரிவுகளுக்குள் அடங்குகிறது. ஒன்று மென் பக்தி மற்றது வன்பக்தி, மென்பக்தி என்பது மாந்தரிடையே பொதுவாகக் காணப்படுவது. ஆனால் வன்பக்தி என்பது ஒருசிலரிடம் மட்டுமே வன்மையாக வெளிப்படுவது. இக்கட்டுரை வன்பக்தியை மட்டும் நோக்கியமைகிறது.

## சமூகமும் சமயமும்

எந்த ஒரு மனிதனும் சமூகத்தில் தனித்து வாழ முடியாது. அவன் ஒரு கூட்டத்தோடு இனத்தோடு பிரிவோடு அடையாளப்படுத்தப்படுகிறான் அவனுக்கு அது பாதுகாப்பை வழங்குகிறது. எனினும் அவனது அக மற்றும் புற வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களிலிருந்து வடுபட உயர்வான ஓர் ஆற்றல் அல்லது சக்தி தன்னைக் காப்பாறும் வழிகாட்டும் என்றும் நம்புகிறான்.

‘எங்கெல்லாம் எப்பொழுதெல்லாம் தன்னைவிட உயர்ந்த, புரியாத தெய்வீகமான ஒரு சக்தியை உணர்ந்து அச்சக்தியைச் சார்ந்து மனிதன் செயற்படமுனைகிறானோ அங்கெல்லாம் சமயம் காணப்படுகிறது. அச்சக்திகளுக்கு எதிரில் மதிப்பும் அச்சமும் கலந்த ஓர் உணர்ச்சியின் காரணமாகப் பயபக்தியுடன் தன்னை அச்சக்திக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளும் தன்மையைச் சமய மனஎழுச்சி என்கிறோம். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் பூசையும் வழிபாடுகளும் தோன்றுகின்றன.’[1] என்ற ஃபிரடெரிக் சி.மோவட் என்ற சமூகவியல் அறிஞரின் கூற்று நோக்கத்தக்கது.

மனிதன் தான் சார்ந்திருப்பதாக உணர்கிற கடவுள் அல்லது தெய்வங்களை நம்பி அச்சக்திக்குக் கீழ்ப்படிகிற தன்மையே சமயம் அல்லது மதம் எனப்படும். கடவுளுடன் மனிதன்

கொண்டிருக்கிற உறவு பற்றிய எண்ணங்கள், தீர்மானங்கள், சித்தாந்தங்கள், மன உணர்ச்சி, உளவியல் செய்கை ஆகியன சமயம் பற்றிய உள்ளீடான பகுதிகள் ஆகும். சமய உணர்ச்சிகள் செயல்படுத்துகிற சடங்குகள், நிகழ்ச்சிகள், வழிபாட்டு முறைகள் போன்றவை சமயத்தின் வெளிப்படையான பகுதிகள்.

பக்திக்குரியவன் இறைவன் மட்டுமே. அந்த இறைவனோடு உறவு கொண்டாட நினைக்கும் பக்தர்களும் வேறுவேறு சமுதாய, பொருளாதாரப் பின்னணியைக் கொண்டவர்கள். எனவே அவர்களின் மனப்பாங்கு மற்றும் தேவைகள் அடிப்படையில் பக்தி வெளிப்படும் முறையும் மாறுகின்றது. பக்தி என்பது ஒன்றுதான் ஆனால் வெளிப்படும் முறை மாறுபடுகின்றது.

பக்தியின் படிநிலைகள்

“முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே”

திருநாவுக்கரசரின் (பா.2343) இந்தப்பாடல் பக்தியின் படிநிலையை விளக்கமாகக் கூறுகின்றது.

இறைவன் புகழைக் கேட்டல்
இறைவன் புகழைப் பாடுதல்
இறைவன் புகழை நினைத்தல்
திருவடியைப் பணிதல்
காணிக்கை யாக்குதல்
தலை வணங்குதல்
நட்புறவு கொள்ளுதல்
உள்ளத்தில் ஒருங்கிணைதல் என்றவாறு படிநிலை விரிகிறது.

பக்தி நெறி

பக்குவப்பட்ட உள்ளத்தில் வெளிப்படும் வேண்டல்கள், பாடல்கள், வழிபாடுகள், ஏனைய சமய ஆசாரங்கள் போன்றவை பக்தியின் வெளிப்பாடுகள். பக்தனின் உணர்ச்சி பரவசம், மனவெழுச்சி, கிளர்ச்சிகளில் தோய்ந்து கிடப்பதும் உண்டு. இவை உண்மையான பக்திக்குத் தேவை என்பதில்லை. இறைவன் பக்தன் என்ற உறவு அடிப்படையில் அதை வெளிப்படுத்தும் முறையில் தான் பக்தி மென்பக்தி வன்பக்தி என்றாகிறது.

பக்தி முறையில் இறைவனை அடையவும் இறையருளைப் பெறுதற்கும் பல வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். அதில் அறிவு, உணர்ச்சி, கிரியை என்ற வழிகளைச் சிறப்பானதாகக் கருதுகின்றனர்.

அறிவுத் துறையில் ஆழ்கின்றவர்கள் மெய்ப்பொருள்வாதிகளாக (தத்துவவதாதிகள்) மாறுகின்றனர். முழுமுதற்பொருளை அறிவின் துணை கொண்டுதான் அறியமுடியும் என்பது இவர்களது நம்பிக்கை. அறிவின் துணையுடன் பக்தி முயற்சியில் ஈடுபடும்போதுதான் அது சிறந்த பக்திமுறையாய் அமையும். அறிவின் துணையை நாடாத பக்தி மூடபக்தியாக வெறியாக மாறிவிடும். கொடுமை நிறைந்த செயல்களிலும் பிறருக்குத் தீங்கிழைக்கும் நிலையிலும் ஒருவனைக் கொண்டு செலுத்திவிடும்.

‘மன உணர்ச்சி மிகுந்தவர்கள் எல்லையற்ற பக்தியால் இறைவனுக்குத் தன்னை உணர்வுபூர்வமான அர்ப்பணிப்பதால் மட்டுமே இறையுணர்வை உணரமுடியும் எனக் கூறுகின்றனர்’ சான்றாக நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள் போன்றோரைக் குறிப்பிடலாம்.

அறிவின் துணைகொண்டு மூலமுழுமுதற் பொருளின் இயல்புகளை ஆராய்ந்து கூறினாலும் அதுவே சரி என்று அறிவுக்குட்பட்டாலும் அந்த மூலப்பொருளிடத்து உணர்வுபூர்வமாக ஈடுபட முடியாது. ‘அறிவு ஈடுபாட்டை ஏற்படுத்த முடியாது. உணர்வு மூலம்

*ஏற்படுகின்ற இன்பத்தை அறிவுவாதம் தரமுடியாது என்பது அறிஞர் அ.ச.ஞனசம்பந்தம் அவர்களின் கருத்தாகும்*[4].

*'உணர்ச்சிவழி' மனிதன் விரும்பியவழியில் செல்வதற்கு வேண்டிய மனஉறுதியைத் தருகிறது. உணர்ச்சியில் மூழ்கிய ஒருதாய் தன் அன்பின் காரணமாகத் தன் சக்திக்கு அப்பாற்பட்ட செயல்களையும் செய்யமுடியும். இதுதான் உணர்ச்சி வழியின் சிறப்பு.*

*மூன்றாவது 'கிரியைவழி' அதாவது செயல்முறை திருக்கோயில் வழிபாடு, நோன்பு, அடியவர்களைப் போற்றுதல், வழிபாடு செய்தல் வழியே இறைவனை அடையமுடியும் என்றும் சிலர் கருதுகின்றனர்என்பதும் சிந்தனைக்குரியது.*

*அறிவு, உணர்ச்சி, கிரியை என்ற மூன்று வழிகளும் ஒன்றாகத் தம்மில் அளவொத்து இருந்தால் சிறப்பு. மூன்று வழிமுறைகளும் சிறப்புடையதே. எனினும் இம்மூன்றும் ஒருவரிடத்தே காணப்படின் அவர் சிறந்த பக்தியாளராகத் திகழவியலும். இதில் அளவு என்பது அவரவர் உளப்பாங்கினைப் பொறுத்ததேயாகும். பக்தியில் வன்மை மிகின் அது வன்பக்தி எனும் நிலையைக் கூட்டுவிக்கும்.*

*வன்பக்தி*

*இயல்புநிலை வரம்பு மீறும் நிலையில் அந்தப் பக்தியை வன்பக்தி என்ற சொல்லால் குறிக்கலாம். பக்தி மேலிட்டால் வன்முறையில் இறங்கும் போது அது வன்பக்தியாக மாறுகிறது.*

*'வன்' என்ற சொல்லிற்கு வலிய, மிகு, கொடிய என்று கழகத் தமிழகராதி பொருள் தருகிறது.*[5]

*வன்மை என்ற சொல்லிற்கு ளுவசநபெவாஇ வலிமை, கடினம், ஆற்றல்,; குழசஉநஇ எழைடநnஉந என்று பலபொருள்களைச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி (ஏழட ஏஜ ப.3564) விளக்கிச் செல்கிறது. நாவலூரான் நம்பி வன்தொண்டர் என்று தேவாரம் (942:10) குறிக்கின்றது.*

*இந்த விளக்கங்களின் அடிப்படையில் வன்பக்தி என்பதற்கு வலிய பக்தி, மிகுந்த பக்தி, கொடிய பக்தி, முரட்டுத்தனமான பக்தி, உறுதியான பக்தி என்றவாறு பொருள் விரியும்.*

*வன்முறை பக்தியை வன்பக்தி என்று கொண்டால் பல விளக்கங்களைக் காணவியலும். வன்முறை என்பது மென்மைக்கு மாறானது. வன்முறை என்றாலே இரத்தம், கொலை, பழி, தீ, கத்தி ஆகியன நினைவுக்குவரும். வன்முறை என்பது பிற உணர்வுகளைப் போன்றதொரு வெளிப்பாடு. அது நன்மையாகவோ தீமையாகவோ அமையலாம்.*

*வன்முறைவேறு வன்பக்தி என்பது வேறு. வன்பக்தியில் வன்முறைக் கூறுகள் உள்ளன. வன்பக்தியில் இயல்பு நிலையைவிட ஊற்றமும் வேமும் மிகக் கூடுதலாக இருக்கும். மூர்க்கம் என்ற சொல்லாலும் இதனைக் குறிக்கலாம். 'மூர்க்கம்' என்ற சொல்லிற்குக் கழகத் தமிழகராதி 'மூடத்தன்மை' 'கடுஞ்சினம்' 'கொண்ட கருத்துவிடாமை' என்ற பொருள்களைத் தருகிறது8 (ப.274) பக்திக்குக் கொண்ட கருத்தினைவிடாமை என்ற பொருள் பொருத்தமாக உள்ளது. வன்பக்தி என்பது வன்செயல்களின் வழியாக இறைவனை அடைதல் என்பதாகும். இந்த வகையான வன்பக்தி இறையடியார்களின் வாழ்வு வழியாக வெளிப்படுகின்றது. இத்தகைய வன்பக்தியைக் கொண்ட அடியார்கள் எல்லா நாட்டிலும் சமயத்திலும் உள்ளனர்.*

*அடியார்களின் வன்பக்தி*

*அடியார்களின் வன்பக்தியானது தம்மை வருத்திக்கொள்ளல், பிறரை வருத்துதல், பிறரால் தாம் தண்டிக்கப்படுதல் அல்லது தாக்கப்படுதல் என்றவாறு வன்பக்தி வெளிப்படும் களம் அமைகிறது. தொன்மைக் காலத்திலேயே இத்தகைய வன்பக்தி தொடங்கிவிட்டது. இந்த வன்பக்தி வழிபாட்டுச் சடங்குகளில் இன்றளவும் நிலை கொண்டுள்ளது.*

*மன்னனின் வெற்றிக்காகவும் மக்கள்வாழ்வுக்காகவும், பயிர்வளத்திற்காகவும் மழைக்காகவும் பலி கொடுத்து வழிபடும் வழக்கம் பழங்காலத்தில் நிலவியதைக் காணலாம். இன்றளவும் கிடைக்கும் சாவான்கல், நவகண்டம் கொடுத்தல் என்று வரலாற்றில் அறியப்படும் தன் கழுத்தை; தானே அறுத்துக் காணிக்கையாகக் கொடுக்கும் கற்சிலைகள் வன்பக்திக்குரிய தொன்மைச் சான்றுகளாக உள்ளன.*

*தெய்வங்களுக்கு உயிர்ப்பலியாக விலங்குகள், பறவைகள் ஆகியவற்றைக் கொல்லும் சடங்குகள் வன்பக்திக்குச் சான்றாகின்றன.*

*திருநாவுக்கரசரை நீற்றறையில் தள்ளியது[9], கடலில் பாய்ச்சியது[10], நஞ்சுண்ணக் கொடுத்தல்[11] ஆகியன சமணர்களின் வன்பக்தியில் திருநாவுக்கரசர் அடைந்த இன்னல்கள் ஆகும். சமணர்களைக் கழுவில் ஏற்றியது ஞானசம்பந்தரின் வன்பக்தியால் சமணர்கள் அடைந்த இன்னல்கள் ஆகும்[12].*

*அலகு குத்திக் கொள்வது, தீச்சட்டி ஏந்துதல், தீமிதித்தல், சாட்டையால் அடித்துக் கொள்ளுதல், தலையில் தேங்காயை உடைத்தல், ஆயுதங்களால் தம்மை வருத்திக் கொள்வது போன்ற வன்பக்தியின் செயல்பாடுகள் சமயங்கள் தோறும் நிலவக் காணலாம்.*

*வன்தொண்டர்களின் வன்பக்தியின் செயல்பாடுகள் சைவ, வைணவ, கிறித்துவ, இசுலாமிய சமயங்களிலும் காணப்படுகின்றன.*

*சைவ அடியார்கள்*

*சைவ அடியாரான அரிவாட்ட நாயனாரின் இயற்பெயர் தாயனார். இறைவனுக்கு அமுது செய்விப்பார். அப்பணி தடைபட தன் உடைவாளால் தன் கழுத்தினை அறுக்கத் தொடங்க இறைவன் அதனைத் தடுத்து ஆட்கொண்டார்[13].*

*இவ்வாறே திருக்குறிப்புத் தொண்டர், அடியார்களின் திருக்குறிப்பினை அறிந்து திருத்தொண்டு செய்தமையால் திருக்குறிப்புத் தொண்டர் என்று அழைக்கப்பட்டார். அடியார்களின் உடைகளைத் துவைத்துக் கொடுப்பது இவரின் திருப்பணி. ஒருநாள் அடியார் வேடத்தில் வந்த இறைவனின் ஆடையை மாலைக்குள் துவைத்துத் தருவதாக வாக்குக் கொடுத்து துவைத்தார். பெருமழையால் உடை உளரவில்லை. தம் வாக்குப் பொய்த்ததை அடுத்து துணி துவைக்கும் கல்லில் முட்டி தம் உயிரை மாய்க்க முற்பட்டார். இறைவன் தடுத்தாட்கொண்டார் என்பது புராணம்[14],*

*கலியநாயனார் - திருக்கோவில் விளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றுவது இவரின் திருப்பணி. எண்ணெய் ஊற்றியே இவரின் செல்வத்தை இழந்தார். இறுதியில் தன் கழுத்தை அறுத்து இரத்தத்தினால் விளக்கெரியச் செய்ய முற்பட்டார். அவரின் இச்செயலினைத் தடுத்து இறைவன் அருளினார்.[15],*

*கணம்புல்ல நாயனார் - இவர் மிகுந்த செல்வர், செல்வித்தின் பயனே திருக்கோவிலுக்கு விளக்கேற்றுதல் என்று எண்ணி விளக்கேற்றி வந்தார். செல்வம் வற்ற, கணம்புல்லைக் கொண்டு விளக்கேற்றினார். அதுவும் தீர்ந்து போக அடுத்த விளக்காகத் தம்முடியையும் உடலையும் தீயிட்டு எரித்தார். இவர் சிவபதம் அடைந்தார்.[16]*

*ஏயர்கோன் கலிக்காம நாயனர் - இவருக்கு ஒருமுறை சூலைநோய் ஏற்பட அவரின் பிணியைத் தீர்க்க சுந்தரர் வருகிறார். இதையறிந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் வாளால் தம் வயிற்றைக் கிழித்து மாண்டார். ஏனெனில் சுந்தரர் இறைவனைத் தூதுபோகச் செய்தமையால் அவரால் நோய் குணமாகக் கூடாது என்று இறந்தார். பின்னர் இறையருளால் மீண்டும் உயிர்த்தெழுந்தார்[17], கண்ணப்பர் - இறைவன் மீதுகொண்ட அளவற்ற அன்பினால் இலிங்கத் திருமேனியின் கண்களில் வந்த குருதியை நிறுத்த தம் கண்ணை பெயர்த்து அப்பினார்.[18],*

*மூர்த்தி நாயனார் - மதுரையில் இருக்கும் சொக்கநாதப் பெருமானுக்குத் தினமும் சந்தனம் அரைத்து வழங்குவதைத் தம் திருத்தொண்டாகச் செய்துவந்தார். வேற்றரசர் மதுரையை ஆட்சிசெய்ய தமக்கு சந்தனம் கிடைக்காமையால் வருந்தி அரைக்கல்லில் தனது முழங்கைகளை வைத்து எலும்பு தசை தேயும்படி குருதி சொட்ட தேய்த்தார். நாயனார் மதுரையை அரசாண்டார்[19],*

*காரைக்காலம்மையார் - காரைக்கலம்மையார் இறைவனின் மீதுகொண்ட பக்தியினால் தம் இளமையும் அழகும் கெடும்படியான பேய்வடிவத்தை வேண்டி பெற்றார்[20]*

*சிறுத்தொண்ட நாயனார் - இவரின் இயற்பெயர் பரஞ்சோதி, சிவனடியார்களுக்கு உணவளித்த பின்னரே தாம் உணவருந்தும் பழக்கம் உடையவர். ஒருநாள் காபாலிக வடிவில் வந்த இறைவன் கேட்டதற்காக சீராளன் என்ற தம் மகனையே உணவாகப் படைத்தவர்[21]*
*, இயற்பகை நாயனார் - சிவனடியார்கள் எதை விரும்பிக்கேட்டாலும் மறுக்காது தரவல்லவர். சிவபெருமான் அடியார் வேடத்தில் இவரின் மனைவியைக் கேட்க இன்முகத்தோடு வழியனுப்பத் துணிந்தார்[22].*

*மானற்கஞ்சார நாயனார் - மணக்கோலத்தில் இருந்த தம் மகளின் கூந்தலைச் சிவனடியார் வேடத்தில் வந்த இறைவன் கேட்டதற்காக வெட்டி தந்தவர்[23]*

மெய்ப்பொருள் நாயனார் - அடியாரின் வேடமான திருநீறு, கண்டிகையணிந்த தவவேடமே மெய்யென கருதியதால் இவரின் பெயர் மெய்ப்பொருள் நாயனார் ஆவர். மன்னரான இவரால் போரில் தோல்வியுற்ற ஒரு மன்னன் சிவனடியார் வேடத்தில் வந்து சூழ்ச்சியால் நாயனாரை கொன்றான். இருப்பினும் அந்த மன்னனின் தவவேடத்திற்கு மதிப்பளித்து அவனைப் பாதுகாப்பாக அனுப்பிவைத்தார்[24],

ஏனாதி நாயனார் - இவர் வாள்வித்தை கற்றறிந்த சான்றோராக விளங்கினார். திருநீற்றின்மீது பெரும்பற்றுக் கொண்டவர். இதனால் இவரின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட ஒருவன் தன் உடல்முழுதும் திருநீறு பூசி இவருடன் வாள்சண்டைக்குச் சென்று இவரை வென்றான்.[25]

புகழ்ச்சோழர் - கருவூரை ஆட்சிசெய்த மன்னர். இவரின் பட்டத்து யானை சிவனடியாரின் பூக்கூடையைக் கீழே தள்ளிவிட அதைக்கண்ட எறிபத்த நாயனார் தம்வாளினால் யானையின் தும்பிக்கையைத் துண்டித்தார். இச்செய்தி கேட்ட புகழ்ச்சோழர் தம்கையில் இருந்த வாளினை எறிபத்தரிடம் கொடுத்து தம் தலையைக் கொய்யுமாறு கூறித் தம் யானையின் தவறுக்கு வருந்தினார்.[26]

அப்பூதி அடிகள் - திருநாவுக்கரசரின் மீது அளவற்ற பக்தி வைத்திருந்தார். அவர் பெயரில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து அடியார்களுக்கு உதவினார். தம் மகன் அரவம் தீண்டி இறந்ததையும் மறைத்து திருநாவுக்கரசருக்கு உணவுபாலிக்கத் துணிந்தார். திருநாவுக்கரசர் இதையறிந்து 'ஒன்றுகொலாம்' எனும் பதிகம் பாடி அமப்பூதியடிகளின் மகனை உயர்பெறச் செய்தார்.[27],

எறிபத்த நாயனார் - சிவனடியார் கொண்டு சென்ற பூக்கூடையை பட்டத்து யானை தட்டிவிட்டது. இதனால் சினந்த எறிபத்தர் யானையையும், யானைப்பாகனையும் வெட்டிச் சாய்த்தார்[28],

மூர்க்க நாயனார் - சூதாடுவதில் வல்லவர். தாம் சூதாடி வென்ற செல்வங்களை அறச்செயல்களுக்குப் பயன்படுத்தினார். மூர்க்கக் குணம் உடையவராகத் திகழ்ந்தார்.[29]

கோட்புலி நாயனார் - சிவாலயத்திற்கு நாள்தோறும் படித்தரம் வழங்கும் பொருட்டு நெல் வழங்குவார். போருக்குச் செல்லும் சூழல் ஏற்பட்டதால் தம் உறவினர்களிடம் நெல்மூட்டைகளை வழங்கிச் சென்றார். அதனை அவர்கள் தங்கள் உணவிற்காகப் பயன்படுத்தியதை அறிந்து அனைவரையும் வெட்டிச் சாய்த்தார்[30],

சண்டேசுர நாயனார் - தாம் சிவபூசைக்கு வைத்திருந்த பால்குடத்தைத் தம் தந்தை காலால் எட்டி உதைத்ததால் தந்தையின் காலை வெட்டினார்[31],

கலிக்கம்பர் - தம் வீட்டிற்கு வந்த அடியார்களுக்கு தம் மனைவியைக் கொண்டு அவர்களின் பாதங்களை கழுவினார். வந்த நால்வரில் ஒருவரின் காலை இவரின் மனைவி கழுவ மறுத்ததார். ஏனெனில் அந்த அடியார் முன்பு அவர்கள் வீட்டில் பணியாளராக இருந்தவர். அதனால் மனைவியின் கரத்தினை வெட்டினார்[32]

திருநீலநக்கர் - சிவலிங்கத்தை தம் மனைவியோடு பூஜித்தார். லிங்கத் தருமேனியில் ஓர் சிலந்தி இருப்பதைக் கண்டு இவரின் மனைவி வாயால் ஊதினால். இதனால் லிங்கம் தீட்டுப்பட்டதாக எண்ணி தம் மனைவியை வெறுத்தார். பின்னர் இறைவனின் அருளால் மனைவியோடு சேர்ந்தார்[33]

கழற்சிங்கர் - மன்னரான இவர் பூசைக்கு வைத்திருந்த மலரினை முகர்ந்த தம் மனைவியின் கைகளை வெட்டினார்[34]

சத்தி நாயனார் - சோழநாட்டைச் சேர்ந்த இவர் சிவனடியார்களை எவரேனும் இகழ்ந்தால் அவரின் நாவை வெட்டிவிடுவார்[35]

செருத்துனை நாயனார் - இறைவனின் பூசைக்கு வைத்திருந்த மலரைத் தம் மனைவி முகர்ந்ததால் மனைவியினை மூக்கை வெட்டினார்[36]

இந்நாயன்மார்களின் வரலாறுகள் வன்பக்தி அடியார்களுக்கான காட்டுகளாகின்றன. இவ்வரலாறுகள் முற்சுட்டிய வன்பக்திப் பிரிவுகளுள் பொருந்தும். இவர்தம் வரலாறுகளைப் பெரியபுராணம் விரிவாகப் பேசுகிறது.

வைணவ அடியார்கள்

திருமங்கையாழ்வார் திருவரங்கம் திருக்கோயில் கைங்கர்யங்களில் ஈடுபட வழிப்பறி, கொள்ளையடித்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டமை அவரது வன்பக்தியைக் காட்டுகிறது[37].

சைவம் உயர்ந்தது எனக் கூறச் சொன்ன மன்னனின் ஆணையை மீறி வைணவம்தான் உயர்ந்தது எனக் கூறி கூரத்தாழ்வார் தன் கண்ணை இழந்தது அவரது வைணவ வன்பக்திக்குச் சான்றாகிறது[38].

வைணவ அடியாரான திருக்கச்சிநம்பி உணவு உண்ட இடத்தை (அவர் பிறசாதியினர் என்று)த் தூய்மை செய்த மனைவியை ராமானுஜன் விலக்கி வைத்தது அவரது வன்பக்திக்குச் சான்றாகிறது[39].

இசுலாமியத்தில் வன்பக்தி

இசுலாமியர்களின் ஒரு பிரிவினர் நபிகளின் பெயரர்களான அசன், உசேன் இருவரும் போரில் கொல்லப்பட்டதை நினைவில் கொள்ளும் நாளான மெகரம் எனும் பண்டிகையில் தங்களைத் தாங்களே மார்பில் வாளால் வெட்டிக் கொள்ளுதல், தீமிதித்தல் போன்ற சடங்குகளில் ஈடுபடுகின்றனர். இதுவும் வன்பக்தியின் அடிப்படையில் நடைபெறுவதாகும். கடுமையான உண்ணா நோன்பு மேற்கொள்வதும் வன்பக்தியேயாகும்.

கிறித்துவத்தில் வன்பக்தி

கிறித்துவத்தில் இயேசு சிலுவையில் அறையப்பட்டதும் அவரின் சீடர்கள் இயேசுவின் நற்செய்தியை மக்களிடையே பரப்பினர். அவர்களுக்குத்; துன்பம்வரும் என்று தெரிந்தும் பொது இடங்களிலும் கோயில்களிலும் போதனைகளைத் தொடர்ந்தனர். அதனால் அவர்கள் பல தண்டனைகளைப் பெற்றார்கள். இவை அவர்களின் வன்பக்தி உணர்வுக்குச் சான்றுகளாகின்றன. தாங்கள் கொண்ட கொள்கையிலிருந்து மாறாமல் அதற்காகப் பல்வேறு இன்னல்களைப் பொறுத்துக் கொள்வதும், உயிர்த் தியாகம் செய்வதும் வன்பக்தி;யின் பாற்படும். ஆபிரகாம், மோசே, ஏசு, மீக்காயா, எலயாசர் என இறை அடியார்களின் பட்டியல் விரியும். இவர்கள் அரசனால் தண்டிக்கப்பட்டும் கொலையுண்டும் வன்பக்தியிலிருந்து வலுவாமல் கிறித்துவ மதம் பரவுவதற்குத் தொண்டாற்றியவர்கள். இவர்களின் வரலாறுகளைத் திருச்சபை சரித்திரம்40 எனும் நூல்விரிவாகப் பேசுகிறது.

கிறித்துவ மதத்தைப் பின்பற்றும் பக்தர்கள் வன்பக்தியின் விளைவால் சிலுவையைச் சுமந்து கொண்டு வேளாங்கண்ணி, பூண்டி முதலான கிறித்துவத் தலங்களுக்குப் புனித நடைப்பயணம் மேற்கொள்கின்றனர். சிலர் சிறு தேர்களை இழுத்துக் கொண்டும், சுமந்து கொண்டும் நடைப் பயணம், நோன்புகளை மேற்கொள்கின்றனர். இச்செயல்கள் கிறித்துவத்தில் நிலவும் வன்பக்தியைக் காட்டுகின்றன.

மேற்கண்டவாறு மக்களிடையே வன்பக்தி என்பது ஆழமாக மனதில் பதிந்திருக்கின்றது. இப்பக்தி உணர்வு பக்தர்களின் வாயிலாகவும் அடியவர்களின் வாயிலாகவும் வெளிப்படுகின்றது.

நிறைவாக

மனித சமூகத்தில் சமயம் ஓர் அங்கமாக விளங்குகிறது. சமயம் என்பது பக்தியால் கட்டமைக்கப்படுகிறது. பக்தி என்பது தனிமனிதன் மன உணர்வு. அந்த உணர்வினைச் சமயம் தன்வயப்படுத்திக் கொள்கிறது. அது அவனுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வினைத் தருகிறது. பக்தியானது பல படிநிலைகளைக் கொண்டது. அதன் இறுதிநிலை இறையுடன் கலப்பது. பக்தி நெறியில் மூன்று கூறுகள் உள்ளன. அறிவு, உணர்ச்சி, கிரியை அல்லது செயல்பாடுகள் இதனை உணர்ந்து பக்திவழியில் இறையனுபவத்தை அடைய அடியார்கள் முயல்கின்றனர். இந்த இறையனுபவத்தைக் கூட்டுவிக்கும் பக்தியானது மென்பக்தி வன்பக்தி என இருவகைகளாகப் பிரிகிறது. வன்பக்தியாளர்கள் மிகுந்த இன்னல்களை அடைகின்றனர். எனினும் அதன் வாயிலாக இறையருளைப் பெறலாம் என்று நம்புகின்றனர். இத்தகைய வன்பக்தியாளர்கள் அனைத்து சமயங்களிலும் நிறைந்துள்ளனர். அவர்களை நினைவு கொண்டு அவர்கள் பட்டபாடுகளை இன்றைய அடியார்களும் பக்தர்களும் தங்களை வருத்தி இறையருளைப் பெற முயல்கின்றனர். வன்பக்தி என்பது சமயங்களில் இன்றளவும் நிலவுகிறது. அது சமூகத்தில் பல்வேறு தாக்கங்களைப் புறநிலைகளில் ஏற்படுத்தி வருகிறது.

குறிப்பெண் விளக்கம்

1. சமூகவியல் அடிப்படை கோட்பாடுகள் ப.281
2. திருநாவுக்கரசர் தேவாரம் பா. 2343
3. அ.ச. ஞானசம்பந்தம், பெரியபுராணம் ஓர் ஆய்வு, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை 1994, ப.450
4. மேலது, ப.453
5. கழகத் தமிழ் கையகராதி ப.285
6. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி, (தொ.6) ப.3564
7. தேவாரம் 942ஃ10
8. கழகத் தமிழ் கையகராதி ப.274
9. திருநாவுக்கரசர் தேவாரம் பா.6112
10. திருநாவுக்கரசர் தேவாரம் பா.4262
11. திருநாவுக்கரசர் தேவாரம் பா.4841
12. திருஞானசம்பந்தர் தேவாரம் பா.2397
13. பெரியபுராணம், (முதற்காண்டம்) அரிவாட்டாய நாயனார் புராணம் பக்.797-809
14. மேலது, திருக்குறிப்புத் தொண்டர் புராணம் பக். 900 – 975
15. மேலது, (இரண்டாவது காண்டம்) கலியநாயனார் புராணம் பக். 1082 – 1089
16. மேலது, கனம்புல்ல நாயனார் புராணம் பக்.
17. மேலது, ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் பக். 676 – 862
18. மேலது, கண்ணப்ப நாயனார் புராணம் பக். 676 – 754 I
19. மேலது, மூர்த்தி நாயனார் புராணம் ப. 835 I
20. மேலது, காரைக்காலம்மையார் புராணம் ப. 1292 I
21. மேலது, சிறுத்தொண்டர் நாயனார் புராணம் ப. 914
22. மேலது, இயற்பகையார் நாயனார் புராணம் ப. 489 I
23. மேலது, மானக்கஞ்சார நாயனார் புராணம் ப. 775 I
24. மேலது, மெய்ப்பொருள் நாயனார் புராணம் ப. 534 I
25. மேலது, ஏனாதி நாயனார் புராணம் பக். 630 – 654
26. மேலது, புகழ்ச்சோழர் நாயனார் புராணம் பக். 1049 – 1064 II
27. மேலது, அப்பூதி அடிகள் புராணம் ப. 1337 I
28. மேலது, எறிபத்த நாயனார் புராணம் ப.594 I
29. மேலது, மூர்க்க நாயனார் புராணம் பக். 892 – 897 II
30. மேலது, கோட்புலி நாயனார் புராணம் ப.1136 II
31. மேலது, சண்டேசுர நாயனார் புராணம் ப.976 I
32. மேலது, கலிக்காம்பர் நாயனார் புராணம் ப. 1077 I
33. மேலது, திருநீலநக்கர் நாயனார் புராணம் ப.1369 I
34. மேலது, கழற்சிங்கர் நாயனார் புராணம் ப.1118 II
35. மேலது, சத்தி நாயனார் புராணம் ப. 1090 II
36. மேலது, செருத்துணை நாயனார் புராணம் ப. 1129 I
37. நாலாயிர திவ்ய பிரபந்தம் (தொ.2) ப.4
38. கூரத்தாழ்வார் வய.அ.றமைip்நனயை.ழசப
39. ஆராயிரப்படி குருபரம்பராப்ரபாவம் (பக்.166, 167, 172, 173)
40. திருச்சபை சரித்திரம் (பக். 20 - 24)

துணைநூல் பட்டியல்

1. சமூகவியல் அடிப்படைக் கோட்பாடுகள் ப.281 சிஎச். டாசன் (தமிழாக்கம்) ஜே. நாராயணன், தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ் நாடு அரசாங்கம் முதற்பதிப்பு : மார்ச் 1964.

தமிழாக்கரம் ஜெ. நாராயணன் சமூகவியல் அடிப்படைக் கோட்பாடுகள், தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், 1960

2. ஸ்ரீமத் திருநாவுக்கரசர் தம்பிரான் சுவாமிகள் (ப.ஆ) திருத்தொண்டர் புராணம் முதற்காண்டம், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமையாதீனம், மயிலாடுதுறை – 609 001 பதிப்பு. 1997

*3. ஸ்ரீமத் திருநாவுக்கரசர் தம்பிரான் சுவாமிகள் (ப.ஆ) திருத்தொண்டர் புராணம், இரண்டாவது காண்டம், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமையாதீனம், மயிலாடுதுறை – 609 001. பதிப்பு 2014*
*4. ஸ்ரீ வீ.எஸ்.வீ. ராகவதாசன் (ப.ஆ) நாலாயிர திவ்யபிரபந்தம், (தொ.2) முல்லை நிலையம், 9 பாரதிநகர் முதற்தெரு, தி.நகர். சென்னை – 17 (முதற்பதிப்பு – 2000)*
*5. ஸ்ரீ எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், (ப.ஆ) பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிய ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம், 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி 17.*
*6. ஞானசம்பந்தம் ஆ.ச., பெரியபுராணம் ஓர் ஆய்வு, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை – 94,*
*7. ... திருச்சபை சரித்திரம், தமிழிலக்கிய கழகம், தூத்துக்குடி, 1967,*

********* ********* ********** ********* ********* ********** ********** **********